வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 16.2.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

அறிவியல் தொழில் நுட்பத்தில் இந்தியா வளர்ச்சி அடைந்து வருவதை செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு எடுத்துக் காட்டுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் நாட்டில் தீவிரவாத வன்முறைகள் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக 25 காரைக்கால் மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

வங்க கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி வரும் 18-ஆம் தேதி வலுப்பெறக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*முர்மு*

இந்திய தணிக்கை மற்றும் கணக்கு சேவை, பாதுகாப்பு விமான தர உறுதி சேவை  மற்றும் இந்திய வர்த்தக சேவை ஆகியவற்றின் பயிற்சி அதிகாரிகள் இன்று புதுடெல்லியில் உள்ள குடியரசு தலைவர் மாளிகையில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை சந்தித்தனர். இந்திய தணிக்கை மற்றும் கணக்கு சேவை அதிகாரிகள் பொது நம்பிக்கையின் பாதுகாவலர்கள் என குடியரசு தலைவர் புகழாரம் சூட்டினார். முதலீட்டை ஈர்ப்பதிலும், வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும் இந்திய வணிகங்களை உலக அளவில் விரிவுப்படுத்தவும் இந்திய வர்த்தக சேவை அதிகாரிகளின் பங்களிப்பு அளப்பரியது என அவர் மேலும் கூறினார். பாதுகாப்பு விமான தர உறுதி சேவை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய குடியரசு தலைவர் ஆயுதப் படைகளுக்கான தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட மற்றும் உலகத் தரம் வாய்ந்த ஆயுதங்களின் தரங்களை உறுதி செய்ய வேண்டியது அவர்களின் முதன்மையான பணி என வலியுறுத்தினார்.

*உச்சி மாநாடு*

புதுடெல்லியில் இன்று தொடங்கிய இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டிற்கு 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இணையதளம் மூலம் பதிவு செய்துள்ளனர். 20 நாடுகளைச் சேர்ந்த உலகத் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர். அவர்களில் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரோன், பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, ஸ்பெயின் அதிபர் பிட்ரோ சான்ஸஸ், மொரீசியஸ் பிரதமர் திரு நவீன் சந்திர ராம்கூலம், இலங்கை அதிபர் அனுரகுமார திசா நாயகா, பூட்டான் பிரதமர் திரு ஷெரின்டோங்கே, ஆகியோரும் அடங்குவர். இந்த உச்சி மாநாட்டிற்காக பல்வேறு நாடுகளில் இருந்து ஏராளமானோர் இந்தியா வந்திருப்பது பெருமைக்குரிய விஷயம் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் அறிவியல் தொழில் நுட்பத்தில் இந்தியா வளர்ச்சி அடைந்ததற்கு இந்த மாநாடு எடுத்துக் காட்டாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

5 நாட்கள் நடைபெற உள்ள இந்திய செயற்கை நுண்ணறிவின் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, இதுதொடர்பான கண்காட்சியை இன்று மாலை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் தொடக்கி வைக்க உள்ளார். முன்னதாக, இந்த மாநாட்டில் உரையாற்றிய மத்திய அரசின் முதன்மை பொருளாதார ஆலோசகர் திரு ஆனந்த நாகேஸ்வரன், கூறுகையில் கல்வி சீர்திருத்தங்கள் மூலம்

செயற்கை நுண்ணறிவு சார்ந்த வேலை வாய்ப்புகளை இந்தியா முன்னெடுத்து செல்ல முடியும் என தெரிவித்தார். தனியார் துறைகள், கல்வி நிறுவனங்கள், மற்றும், கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து இதில் செயலாற்ற வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

*அமித் ஷா*

டெல்லி காவல்துறையினரின் 79-ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வடகிழக்கு மற்றும் மாவோயிஸ்ட் பகுதிகளில் 80 சதவிகித வன்முறைகள் தற்போது குறைந்துள்ளதாகவும், கடந்த 11 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டது உள்ளிட்ட பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டதாகவும், திரு அமித் ஷா அப்போது தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் தீவிரவாதத்தையும் போதைப் பொருள் கடத்தலையும் எதிர்கொள்ளும் வகையில் 345 கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த நவீன தொழில்நுட்ப தலைமையகம் காவல்துறையினருக்காக தலைநகர் டெல்லியில் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

*ராஜ்நாத் சிங்*

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று பெங்களூருவில் உள்ள பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பிற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். தற்போதைய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பதிப்பாய்வு செய்த அவர் வளர்ச்சியில் உள்ள பல்வேறு திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார். இந்திய தொழில் துறை, கல்வித் துறை மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மற்றும் ஆயுதப் படைகளுக்கு வழங்கப்படும் ஆதரவு குறித்து அவருக்கு விளக்கப்பட்டது. உள்நாட்டு ஏவுதளங்கள் மற்றும் அவற்றின் கூறுகளை காட்சிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியையும் பாதுகாப்புத் துறை அமைச்சர் அப்போது பார்வையிட்டார். விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகளுடன் உரையாடிய திரு ராஜ்நாத் சிங் வளர்ந்து வரும் புவிசார் நிலப்பரப்பைக் கருத்தில் கொண்டு விமான இயந்திர தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் அடைவதன் முக்கியத் துவத்தை வலியுறுத்தினார். ஆபரேஷன் சிந்தூரைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் உள்நாட்டு தகவல் தொடர்பு அமைப்புகள் கண்காணிப்பு உபகரணங்கள் மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆயுதப் படைகளின் பாதுகாப்புத் திறன்களில் வளர்ந்து வரும் தன்னம்பிக்கையை நிரூபித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

*சிறுபான்மை விவகாரம்*

சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம் சார்பில் புதுடெல்லியில் இன்று 2026-ஆம் ஆண்டு ஹஜ் பயணத்திற்கான ஹஜ் பிரதிநிதிகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதன் தொடக்க நிகழ்வை மத்திய சிறுபான்மை விவகாரங்களுக்கான இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் கலந்து கொண்டு பயிற்சி வகுப்பை தொடக்கி வைத்தார். சுமார் 1.75 லட்சம் இந்திய யாத்திரிகர்கள் இந்த ஆண்டு புனித யாத்திரை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்கான இந்திய இணை தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் சவுதி அரேபியாவில் இரண்டரை மாத காலத்திற்கு இந்த பிரதிநிதிகள் பணியமர்த்தப்படுவார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

*காரைக்கால்*

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற 25 மீனவர்களை இன்று அதிகாலை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து அவர்களிடம் இருந்த 2 விசைப் படகுகளை பறிமுதல் செய்துள்ளனர்.

இன்று அதிகாலை காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல் மேடு, காசாக்குடி மேடு பகுதிகளைச் சேர்ந்த 25 மீனவர்கள் கடல் எல்லைப் பகுதியில்

மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி மீனவர்களை கைது செய்துள்ளனர். தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களை விசாரணைக்காக இலங்கையின் காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு அழைத்து செல்ல திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் மீட்க உடனடியாக அரசு சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதியில் உள்ள மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சம்பவத்தால் காரைக்கால் மீனவ கிராமங்களில் பெரும் சோகம் நிலவி வருவது குறிப்பிடத் தக்கது.

*மாசி மகம்*

புதுச்சேரியில் வரும் மார்ச் 2-ஆம் தேதி திருக்காஞ்சியிலும், 3-ஆம் தேதி வைத்திக்குப்பம் மற்றும் வீராம்பட்டிணத்திலும் மாசி மகம் திருவிழா நடைபெற உள்ளது. விழா பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளர்கள், பயிற்சி ஆட்சியர் மற்றும் அனைத்து துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். திருவிழாவின் போது பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிக்க வேண்டும் என்றும் ஊர்வலம் செல்லும் வழியில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சரி செய்ய வேண்டும் எனவும், முக்கிய

இடங்களில் தற்காலிக கழிப்பிட வசதிகள் அமைக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். தேவையான தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள் விழா நடக்கும் இடங்களில் தயாராக வைத்திருக்க வேண்டும் எனவும் அப்போது அவர் அறிவுறுத்தினார்.

*காரைக்கால்-வாக்குப் பதிவு*

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் தாலுக்கா அலுவலகங்களில் பொது மக்களுக்காக மாதிரி வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. இதனை மாவட்ட ஆட்சியர் இஷிதா ரதி இன்று நேரில் சென்று ஆய்வு செய்து மாதிரி இயந்திரத்தில் வாக்களித்து அதன் செயல்பாட்டை சோதனை செய்தார். புதிய வாக்காளர்களுக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது தேர்தல் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

*கிரிக்கெட்*

ஆடவர்களுக்கான டி-20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று பிற்பகல் புதுடெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்ற குரூப்-டி பிரிவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

அணியை ஆப்கானிஸ்தான் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி போட்டியின் முதல் வெற்றியை பதிவு செய்தது.

இதற்கிடையே குரூப்-சி பிரிவில் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் இங்கிலாந்து மற்றும் இத்தாலி அணிகளுக்கு இடையே நடைபெறும் ஆட்டத்தில் 203 ரன் எனும் வெற்றி இலக்கை நோக்கி 2-ஆவதாக ஆடி வரும் இத்தாலி அணி சற்று முன் வரை, -------- ஓவரில், ----விக்கெட் இழப்பிற்கு,------- ரன் எடுத்திருந்தது.

இன்று இரவு 7 மணிக்கு இலங்கையில் உள்ள பல்லேகல்லே சர்வதேச மைதானத்தில் குரூப்-பி பிரிவில் ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகள் மோத உள்ளன.

*வானிலை*

தெற்கு வங்க கடலின் மையப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாகவும் இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகளில் 18-ஆம் தேதி முதல் வலுப்பெறக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 19-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி வரை தென் தமிழக கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும்

காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*சந்திரபாபு நாயுடு*

மைக்ரோ சாப்ட் நிறுவனர் திரு பில்கேட்ஸ் இன்று ஆந்திர பிரதேச மாநில தலைநகர் அமராவதியில் முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் ஆகியோரை சந்தித்து பேசினார். முன்னதாக மாநில தலைமைச் செயலகத்திற்கு வந்த அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் திட்டங்களை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின் போது ஆலோசிக்கப்பட்டது. ஆந்திர மாநில அரசின் தொழில்நுட்ப சார்ந்த பயிற்சிகளை மைக்ரோ சாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் வெகுவாக பாராட்டி, அவர்களின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்க ஆர்வமாக உள்ளதாக தெரிவித்தார்.

வேவ்ஸ்

இந்தியாவின் வளர்ந்து வரும் தொழில்நுட்ப திறன்கள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவில் பொறுப்பான ஏற்றுக் கொள்ளலுக்கான கொள்கை சார்ந்த தொலைநோக்கு ஆகியவற்றை எடுத்துக் காட்டும் வகையில் புதுடெல்லியில் நடைபெறும் 2026-ஆம் ஆண்டிற்கான இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டின் மத்திய

தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வேவ்ஸ் கிரியேட்டர்ஸ் கார்னர் என்ற பெயரில் ஒரு பிரத்யேக அரங்கை அமைத்துள்ளது. இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு சுற்றுச்சூழல் அமைப்பில் உலகளாவிய தொழில் நுட்பத்தின் நுகர்வோராக மட்டுமல்லாமல் செயற்கை நுண்ணறிவிற்கான தீர்வுகளை உருவாக்கவும் இந்த அரங்கம் செயல்படும் என இந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தோட்டக் கலை

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை, கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் மற்றும் புதுச்சேரி மாநில தோட்டக்கலை வளர்ச்சி சங்கம் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் இயற்கை வேளாண்மை திட்டத்தின் மூலம் மண்புழு உரத் தொட்டி மற்றும் மண்புழு உரப்படுகை அமைப்பதற்கு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு பட்டியல் கடந்த 13-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரை உழவர் உதவியகங்களில் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படும் என்றும், மேலும் விவரங்கள் புதுச்சேரி மாநில தோட்டக்கலைத் துறையின் இணையதளமான Agri.py.gov.in-ல் வெளியிடப்பட்டுள்ளதாக அத்துறையின் இணை இயக்குநர் திரு சண்முகவேல் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். பட்டியலில் ஏதேனும் ஆட்சேபணை

இருப்பின் வரும் 23-ஆம் தேதிக்குள் எழுத்துப் பூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18,10hrs/16.2.2026/Script.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------